# முரசொலி

முரசு 1 | சென்னை | 18 — 6 — 54 | வெள்ளி | ஒலி 12


# ஆதரிக்கிறோமாம்; :: :: சொல்லுகிறார்கள்!


“காமராசர் ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கக் கிளம்பிவிட்டது; பிராமணர் என்ற காரணத்திற்காக ஆச்சாரியாரை எதிர்த்தார்கள். திராவிடர் என்பதற்காக காமராசரை ஆதரிக்கிறார்கள். ஆள் மாற்றமே தவிர, ஆட்சி, காங்கிரஸ் ஆட்சிதான் என்பதை மறந்துவிட்டார்கள். திராவிடர் ஒருவரை மந்திரியாக ஆக்கிவிட்டதாலேயே தங்களின் பணி முடிந்துவிட்டதாக தி. மு. கழகத்தினர் நினைக்கிறார்கள்”

இப்படியெல்லாம் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் பேசத்துவங்கியிருக்கிறார்கள்; எழுதத் துவங்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் களத்திலே நின்ற காலத்திலேயே காட்டிக் கொடுக்கும் பண்பில் ஈடு பட்டவர்கள் அந்தத தோழர்கள். கழகம் புயலில் சிக்கிய கலமாக இருந்த போது—காளையர் உயிரை காணிக்கையாக செலுத்தி போர்க்கொடி உயர்த்தியபோது — அருமைத் தலைவர்கள் எல்லாம் சிறைக் கூண்டுகளிலே அடைபட்டிருந்தபோது — ஐயாயிரத்துக்குமேற்பட்டோர் கைதிகளாக ஆக்கப்பட்டிருந்த போது— கண்ணீர்ப்புகை – தடியடிப் பிரயோகம்.— தோட்டா தர்பார்—என்ற முறையிலே காங்கிரஸ் ஆட்சி, தன் அடக்குமுறைக் கணைகளைப் பொழிந்தபோது இந்த – காங்கிரசை எதிர்க்கும் கண்ணியர்களாம் கம்யூனிஸ்டு நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் மத்தியிலே குறை கூறத் துவங்கி சர்க்காரிடம் காட்டிக் கொடுக்கும் சாணக்கிய முறையையும் கடைப் பிடிக்கப் புகுந்தனர். கல்வித் திட்டத்தை எதிர்க்கிறோம் என்று தீர்மானம் போட்டுவிட்டு அந்தத் திட்டத்தைஎதிர்த்துபோர்முனையிலே குதித்த கழகத்தைக்குறை கூறித்திரிந்தனர். டால்மியாஎன்ற சிமெண்டு சீமானின் பெயரால்— வட நாட்டுத் திமிங்கிலத்தின் பெயரால் கல்லக்குடியாம் தமிழூருக்குத் தந்த பெயர் டால்மியாபுரத்தை அகற்றிட வேணடுமென்று இந்தத்தரணி முழுதும் தன்மான முழக்கம் கேட்ட நேரத்திலே கம்யூனிஸ்டு தோழர்கள் கேலி பேசினர். பெயரை மாற்றிவிட்டால் ஏழையின் பசி அடங்கிவிடுமா? இப்படி ஒரு பெரிய கேள்வியை சாதாரணத் தொண்டரிலிருந்து சகலகலா வல்லவராம்—ஜார்பரம்பரையை அழித்தலெனின் பரம்பரையைச் சேர்ந்தவராம்— இப்படியெல்லாம் தம்மை நினைத்துக்கொண்டிருக்கும் தலைவர்கள் வரையிலே கேட்டார்கள், பெயர் மாற்றத்தால் ஏழையின் பசி போய்விடுமா என்று! நாம் அவர்களைப் பார்த்துப் பதிலுக்குக் கேட்கவில்லை; டல்லஸ் வரும்போது கருங்கொடி காட்டினால் ஏழையின் பசி நீங்கிவிடுமா? ரோஸன்பர்க் தம்பதிகள் தண்டனைக்கு அனுதாபம் தெரிவித்து கண்டனம் எழுப்பினால் ஏழையின் பசி போய்விடுமா? என்று! அப்படிக் கேட்பது நல்லறிவு படைத்தவர் செயலல்ல; ஆகவே நாம் கேட்கவில்லை. இதுபோலக் கேட்டுக் கொண்டே போனால் எவ்வளவோ கேட்கலாம். உதாரணத்திற்கு ஒன்றுபார்ப்போம்— ஆம்;கற்பனைசெய்துபார்ப்போம்.

தோழர் ஜீவானந்தம் கம்யூனிஸ்டு கட்சி தலைவர். அவர் தம் அருமைத் துணைவியார் கருவுற்றிருப்பதாக வைத்துக் கொள்வோம். கருவுற்ற துணைவியிடம் விடைபெற்று, தோழர் ஜீவா, ரஷ்யாவிலே சுற்றுப் பயணம் நடத்தப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம். சுற்றுப் பயணம் முடிந்து தமிழகம் திரும்புகிறார். திரும்பியதும் தனக்குப் பிறந்துள்ள திருச் செல்வனுக்கு என்ன பெயரிட்டாய் என்று துணைவியாரைக் கேட்கிறார்— அப்போது அந்த அம்மையார், குழந்தைக்கு ஐசன்ஹோவர் என்றோ, அல்லது சர்ச்சில் என்றோ பெயரிட்டிருக்கிறேன் என்று பதில் கூறினால் தோழர் ஜீவா அவர்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? ஆகா, முதலாளித்துவ நாடுகளின் மூக்கணாங் கயிறுகளாம் - அத்தகையோர்- திரு நாமங்களையா நம். குழந்தைக்கு வைத்தாய்? கூடாது கூடாது உடனே பெயரை மாற்ற வேண்டும்-மார்க்ஸ், என்றோ, லெனின் என்றோ பெயரிடல் வேண்டும் என்று கூறுவாரா மாட்

[ 6-ம் பக்கம் ]




பொதுமக்கள் எதிர்ப்புக்கு இணங்க, புதிய கல்வித் திட்டத்துக்கு காமராசர் சரியான அடி கொடுத்ததும் ஆச்சாரியார், அறிக்கை விட்டு ஒப்பாரி வைக்க ஆரம்பித்திருக்கிறார்.

# போலிக் கௌரவம்’ புண்யபாரத் புதிய நாடகம்!

## போலிக் கௌரவம்

வரலாறு, நடந்து போன நிகழ்ச்சிகளின் கோர்வையே, என்றாலும் அது ஒருவற்றாத தேன் சுனைதான்! நன்னெறி காட்டும் பொன்னோவியம்தான்! சோர்ந்து வீழ்ந்த சாம்ராஜ்யங்களின் சோக வரலாற்றை தொகுத்துச் சொல்லி துடுக்குத்தனமாகப் பேசும் துரைத்தனங்களுக்கு படிப்பினை தருகிறதல்லவா சரித்திரம்!

திரைமறைவு நாடகங்கள் நீண்ட நாள் நடைபெற்றதில்லை—திரை கிழிக்கப்பட்டிருக்கிறது—தீமை ஒழிக்கப்பட்டிருக்கிறது—சரித்திரம் பேசுகிறது இப்படி. போலிக் கவுரவம் காலந் தள்ளியது கிடையாது—வேடம் கலைக்கப்பட்டிருக்கிறது — அவர்கள் வெட்கித் தலை குனிந்திருக்கிறார்கள்—சரித்திரம் காட்டுகிறது.

கோசலத்து வேந்தன் சுத்தோதனன் “ஏழ்மையை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது—எல்லோரும் இன்பமாக இருப்பது போல நடிக்கவாவது செய்ய வேண்டும்” என்று பறைசாற்றினான் சித்தார்த்தன் மனதை மாற்ற! முடிந்ததா?

முகமது பின் துக்ளக், தான் செய்த தகாத செயல்களைப் பற்றி யாருமே பேசக்கூடாது — மீறுவோர் தண்டிக்கப் படுவர் என்று ஆக்ஞை பிறப்பித்தான்! என்ன நடந்தது? விவேகமில்லா வேந்தன் என்று மக்கள் மன்றம் தூற்ற வில்லையா?.

## வட நாட்டில்

ஆனால் உலகச் சரித்திரம் எழுதிய பண்டிதரின் ஆட்சி கதியற்றவர்களின் கண்ணீரைத் துடைக்க வகையில்லாமல் கட்டளையிடுகிறது, “எங்கள் நாட்டு ஏழ்மைக் கோலத்தை படம் எடுக்காதே” என்று. பெருஞ்சாலை ஒன்றின் ஓரத்தில் உரித்துப் போடப் பட்டிருந்த பழத்தோலை நிர்வாணமாக இருந்த பிச்சைக்காரன் ஒருவன் எடுத்துத்தின்றுகொண்டிருந்ததை வெளி நாட்டுக்காரர்கள் இருவர் படம் எடுத்தார்களாம். இதைப் பார்த்த ஒரு சில ‘தவப்புதல்வர்’களுக்கு கோபம் பீறிட்டுக் கொண்டு வந்து விட்டது. “யார் நீங்கள்? பரத நாட்டுக்கு வெளி நாட்டிலுள்ள கவுரவத்தை பங்கப்படுத்த உங்களுக்கு எவ்வளவு துணிவு?” என்று கர்ஜித்து அந்த பிலிமையே நாசம்படுத்தி விட்டார்களாம். இந்த நிகழ்ச்சி நாட்டின் எங்கோ ஒரு மூலையில் நடந்ததல்ல; சென்னை, பம்பாய், போன்ற மாநிலங்களின் தலை நகரில்கூட அல்ல இந்த நாடகம் நடைபெற்றது; நாட்டின் தலை நகரில், நாயகர்கள் உலவும் ஊரில் ‘போலிக் கவுரம்’. என்ற புதிய நாடகம் நடைபெற்றிருக்கிறது; ஆமாம், தியேட்டரின் பெயர் ‘டில்லி’ நாடகத்தின் பெயர் ‘போலிக் கவுரவம்’. மக்கள் பலர் நாடகத்தைப் பார்த்தார்கள் — மனவேதனையும் பட்டார்கள்—“எதற்காக இவர்கள் இந்த போலிக் கவுரவத்தை விரும்புகிறார்கள்? இந்தியாவின் அந்தஸ்து வெளிநாட்டில் உயர்வதற்கு இதுதானா வழி? எத்தனை நாளைக்குத்தான் இப்படித் திரை போடப் போகிறார்கள்? நாட்டில் உண்மையான சுபிட்சத்தை நிலவச் செய்து பிச்சைக்காரர்களை ஒழித்து விட்டு, வெளி அரசுகளை அழைத்து, “பாருங்கள் எங்கள் நாட்டை” என்று கூறத்தெரியாதவர்களுக்கு — கூறமுடியாதவர்களுக்கு ஏன் இந்தப் போலிக் கவுரவம்? என்று வாயார வாழ்(!)த்திக் கொண்டு போனார்கள் நாடகத்துக்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர். உண்மையும் அதுதானே!

## தென்னாட்டில்

இந்த ‘போலிக் கவுரம்’ நாடகம் டில்லியில் மட்டுமல்ல, தென்னாட்டிலும் ஒரு சிறு நகரத்தில் நடைபெற்றிருக்கிறது. நாடகம் இரண்டு இடங்களில் நடந்தாலும், இரண்டுக்கும் முக்கியத்துவம் இல்லாமலில்லை. முதல் நாடகத்திற்கு, தலைநகரில் தயாரித்தது என்ற முக்கியத்துவம், இரண்டாவது நாடகத்திற்கு, அமைச்சரே தலைமை வகித்திருக்கிறார் என்ற முக்கியத்துவம். சென்னை மாநில மடாலய மந்திரி அண்மையில் மாயவரம் சென்ற போது ‘பெரிய மனிதர்’ ஒருவர் மந்திரியிடம் மகஜர் ஒன்றை படித்துக் கொடுத்தாராம், மகஜரைப் படிக்கும்போது பாரத நாட்டின் பற்று அவர் முகத்தில் பொங்கி வழிந்ததாம் “தெருக்களில் எச்சில் இலையை எடுக்கக் கூடாது என்று சட்டம் இயற்ற வேண்டும். எச்சில் இலைகளைப் பொறுக்க, நாயோடு மனிதன் சண்டை போடுவதைப் பார்க்க மனம் பதை பதைக்கிறது” என்று மகஜரில் கூறப் பட்டிருக்கிறது. மந்திரியார் இதையும்தான் மனம் சகித்து கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார். ஆனால் முடிவில் பாமேஸ்வரர் பதிலென்ன சொன்னார் என்பதை நாமறியோம்—என்றாலும் நாம் கேட்பதெல்லாம், சட்டத்தின் மூலம் பிச்சைக்காரர்களை ஒழித்து விடுவது என்பதும், ஏழ்மையை அகற்றி விடலாமென்பதும் நடைபெறக் கூடியதா என்பதே! சட்டத்தின் மூலம் பிச்சைக்காரர்களை ஒழித்திட நினைப்பது திருட்டையும், கொலை, கொள்ளையையும் பெருகிடச் செய்வதேயாகும். தகாத செயல் புரிந்து தசையை வளர்ப்பதைவிட பிச்சையெடுத்துச் சாப்பிடலாம் என எண்ணி ‘திருவோடு’ஏந்தியுள்ளவர்கள், பிச்சைக்காரர் ஒழிப்புச் சட்டம் வந்தால், அந்த நல்ல பிச்சைக்காரர்கள் —அறநெறி மார்க்கத்தை பின் பற்றுகிற பிச்சைக்காரர்கள் திருட்டுத் தொழிலை மேற்கொண்டால் அது விந்தைக்குரிய செயலாகாது — சட்டம் இயற்றினாலும் அதனால், பிஞ்சைப் பிடுங்கி பழுக்க வைத்தவன் அடையும் பலன்தான் கிடைக்கும். பிச்சைக் காரர்களை ஒழித்து விட்டோம் என்று ‘போலிக்கவுரவம்’ பேசிக் கொள்ளவும் முடியாது—காலம் பொல்லாதது.

— தென்னரசு

---

## பாவம், அவர் என்ன செய்வார்!

○

நாடாண்ட நள வேந்தன் மனைவி தமயந்தியை விட்டுப் பிரிந்தான் — நடுக்காட்டில்! துணைவியின் புடவையில் பாதியைக் கிழித்துக் கட்டிக் கொண்டு நழுவினான் நளன். என்றாலும், வேந்தன் கொஞ்சதூரம் போவதும், மறுபடியும் வந்து தூங்கும் தமயந்தியைப் பார்ப்பதுமாக இருந்தானாம்! இப்படியொரு பாடல் உண்டு நளன் சரிதையில். அந்த நளனை நினைவூட்ட இன்றைய அரசியலில் ஒரு நளன் தோன்றியிருக்கிறார்.

தான் இல்லாவிட்டால் எதுவும் நடை பெறாது என்ற இறுமாப்போடு துறவியான ஆச்சாரியார் புதிய கல்வித்திட்டம் ஒழிக்கப் பட்டது குறித்து சென்ற வாரம் ‘இந்து’ இதழில் ‘விட்டேனாபார்’ என்ற தோரணையில் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். கல்வித் திட்டத்தை ஒழித்தது மோசடி என்றும், எதிர்த்தவர்கள் அரசியலை பிழைப்பாகக் கொண்டவர்கள் என்றும் கணை தொடுத்திருக்கிறார்.

ஒழித்தது மோசடியாம்! எதிர்த்தவர்கள் அரசியலை பிழைப்பாகக் கொண்டவர்களாம்! உலகம் சொல்லும், யார் அரசியலை பிழைப்பாகக் கொண்டு, போய் போய்வந்தது, நளனைப்போல என்பதை! 1923—24 ல் காஞ்சிமாநாட்டில் வகுப்புவாதம் தோற்கடிக்கப்பட்டு ஆசிரமாவாசியாகி 1930 ல் உப்பு சத்தியாகிரகத்தின்போது காங்கிரசில் சேர்ந்தது யார்? 1941ல் வெள்ளையனே வெளியேறு என்று காந்தியார் கூவியதை எதிர்த்து துறவு பூண்டு குற்றாலம் சென்றதுயார்? மீண்டும் அரசியலில் புகுந்து திருப்பரங்குன்றத்தில் விரட்டப்பட்டது யார்! ஒரு காலத்தில் ஆசிரமத்தில் 50 ரூ சம்பளத்திற்கு அமர்ந்து கவர்னர் ஜெனரலாகி 21 ஆயிரம் வாங்கியது எதனால்? வக்கீல் தொழிலாலா அரசியலைப் பிழைப்பாகக் கொண்டதாலா? நாமறிவோம்—நாடும் அறியும்.

பிணத்தை பேச வைக்க முயன்ற விஞ்ஞானிகள்கூட இன்னும் வெற்றி பெறவில்லை—ஆனால் ஆச்சாரியார் செத்த பாம்புக்கு உயிரூட்ட குழை அடிக்கிறார்-வேப்பங்குழை! அரசியல் வாழ்வு தந்த நைப்பாசை அரசியலுக்குள் மீண்டும் அவரைத் தள்ளுகிறது—பாவம் அவர் என்ன செய்வார்! ஆனால் ஒன்றை மட்டும் நினைவுறுத்த விரும்புகிறோம். “ஆச்சாரியார் கவர்னராக இருந்திருக்கலாம்; கவர்னர் ஜெனரலாக உயர்த்தப் பட்டிருக்கலாம்; பகவத் கீதை பயின்றவராக இருக்கலாம்; வேத உப நிஷத் களுக்கு உரை எழுதியவராக இருக்கலாம்; அறிவாளி எனப் பாராட்டப் படலாம்; என்றாலும் எங்களிடம்—திராவிட இயக்கத்தவரிடம் அந்த ஆணவமிகுந்தவர்ணாச்சிரமத் தலைவர் — ஆச்சாரியார் மூன்றும் முறையும் தோல்விதான் அடைவார்” என தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா சூளுரைத்ததை அவரும் — அவரைச் சார்ந்தவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

# தலையங்கம்

சென்னை (18—6—54) வெள்ளி

## இரட்டைக் குழந்தை !

ஹாலந்தில் லீவார்டன் என்னுமிடத்தில் சயாம் இரட்டையர் என அழைக்கப்பட்ட **போக்ஸ் திஜ்கே டி வ்ரைஸ்** ரண சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டார்கள் என்றும்—பிரிக்கப்பட்ட இரு குழந்தைகளும் உயிரோடிருப்பதாகவும் செய்திகள் வெளியாகின்றன. ஒட்டிக்கொண்டு பிறந்த குழந்தைகள் ரண சிகிச்சை மூலம் வெட்டிப் பிரிக்கப்படுகின்றன.

இந்த செய்தி வந்துள்ள இதழின் வேறு பக்கத்தில் மற்றொரு செய்தியும் வந்துள்ளது. திருவண்ணாமலை இந்தி பிரச்சார சபையில் பேசும்போது, கனம் காமராசர் அவர்கள், **"மக்கள் அனைவரும் தேச ஐக்யத்துக்குப் பாடுபட வேண்டும். வட இந்தியா—தென் இந்தியா என்ற பேத்தல்களுக்கெல்லாம் இரையாகக் கூடாது"** என்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

இரட்டைக் குழந்தைகள்! பிரிக்கக்கூடாது! என்ற *அறி*வுரை உபதேசிக்க அண்ணாமலையார் சன்னதியில் ஆரம்ப விழா நடத்தியிருக்கிறார் அருமைக் காமராசர். ஆரம்பமே வேகம் நிறைந்து காணப்படுகிறது. நேருவின் நடையிலே அவர் வாசகம் மலர்ந்திருக்கிறது. பேத்தலாம்—பேசியிருக்கிறார் சென்னையின் முதல் அமைச்சர். வட இந்தியா—தென் இந்தியா என்ற பேச்சு பேத்தலாகப்படுகிறது அவருக்கு !

அந்தப் பேத்தலுக்கு இரையாகி விடாதீர்கள் என்று மக்களை எச்சரிக்கவும் கிளம்பியிருக்கிறார் அவர்.

வட நாட்டு ஏகாதிபத்யத்திலிருந்து தென்னகம் விடுதலை பெற வேண்டுமென்று போர்க்கொடி உயர்த்தியிருக்கிற நாம், விடுதலைக்கான காரணங்களை வெளியிலே எடுத்துச் சொல்லாமல் வெறுமனே பேத்திக் கொண்டிருக்கவில்லை என்பது புதிய மந்திரிக்குப் புரியாமல் இருக்காது; புரிந்தும் தாக்குகிறார்; புண்ணிலே எறியும் வேலெனப் புறங்கூறுகிறார்.

திராவிடம் என்று ஒரு நாடே கிடையாது எனப் பேசியவர் வாயடைத்துப் போகும் வகையில் ஆதாரம் பலதந்து, அப்படி ஒரு சொல்லே கிடையாது என்றவர்களின் செப்படி வித்தைக்கு ஆயிரம் சான்றுகள் மூலம் பதில் தந்து, திராவிடம் பிரிந்தால் வாழ முடியுமா எனக் கேட்ட சாகசக்காரர்களுக்கு—பிரிந்து வாழ்ந்திடும் பற்பல பிரதேசங்களை எதிர் நிறுத்தி—ஏற்ற விடைதந்து, பிரிவதற்கான அவசியங்களை—விடுதலை முழக்கம் செய்த எந்த நாடும் அறிவித்திடாத அளவில் அவ்வளவு அதிகமாக எடுத்துக் காட்டி அறப்போரை நடத்தி வருகிறோம் நாம்—அது கனம் காமராசருக்கு பேத்தலாகப்படுகிறது.

வடக்கு தழைக்குமாம்—தெற்கு இளைக்குமாம்! ஆனால் வட நாடு தென்னாடு என்று பேசக் கூடாதாம்.

தெற்கே வாழும் வடக்கத்தியான் சுரண்டிக் கொழுப்பானும்—வடக்கே வாழும் தென்னகத்தான் வரண்டு சாவானும்! அதைப் பற்றிப் பேசக்கூடாதாம்—அது பேத்தலாம்! இலங்கையில் துடிக்கும் எட்டு லட்சம் பேரை ஏனென்று கேட்காதாம் வடக்கத்தி அரசு! எம்மவரன்றோ அந்த எட்டு லட்சத்தினரும்—எமக்கென ஒரு நாடிருந்தால், இலங்கைத் தோட்டத்திலே ஏங்கி மடிவரோ—என ஒலிக்கிறது திராவிடமுரசு! அப்படி ஒலிப்பது தவறாம்; அது பேத்தலாம்—பிரதமராகிவிட்டவர் பேசுகிறார் அப்படி! பொன்னும் மணியும் பொழிலும் எழிலும் சூழ்ந்த பூமிக்குடையோர் அழுத கண்ணும், அகத்திலே புண்ணும் கொண்டோராய் அயல் சீமைகளிலே அண்டி வாழ ஓடுகின்றனரே—அவர்கட்கு ஆதிபத்ய நேரு சர்க்கார் சாதித்தது என்ன? அவர்களின் நாடு தனி நாடாக இருப்பின் ஆதவன் கண்ட பனியென விலகாதா அவதிகள் எல்லாம்? எனக்கேட்பது கூடாதாம்—அது ஒரு பேத்தலாம்—அமைச்சரானவர் அறிவிக்கிறார்!

செல்வத்தேக்கம் அங்கே...சீரழிவோர் ஏக்கம் இங்கே! அங்கே இன்பம்—இங்கே துன்பம்! அது சந்தனக்காடு! இது சாக்கடை மேடு! இந்நிலைமாற விடுதலை விருத்தம்பாடு! என நாம் முழக்கினால்—அந்த முழக்கம் முதன் மந்திரியாருக்கு பேத்தலாகத் தெரிகிறதாம்!

காமராசர் எத்தனை பெரியவர்—தமிழகத்து காங்கிரசின் தானைத் தலைவர்—அவரே எத்தனை முறை வடக்கு நோக்கித் தெண்டனிட்டு—அந்த அருள் பெற்ற பின்னரே அமைச்சர் குழு அமைக்க வேண்டியதாகிறது என் அனுதாபக்குரல் எழுப்பினோம் நாம். அந்தக் குரல், இன்று கோலேந்தியவருக்குப் பேத்தலாகப்படுகிறதாம் !

முழு நிலவை மறைக்கும் கரு முகில்களாம் மொழி வெறியர்கள்—இந்தி ஏகாதிபத்யம் நிலைபெற தென்னகத்தில் புரியும் திருட்டுத் தனங்கள்—ஜால வித்தைகள் ஏராளம்—இதோ திருவனந்தபுரத்திலே கட்டாய இந்தியின் கடுமையான தாக்குதலுக்கு இரையாகி இந்த ஆண்டுத் தேர்வில் தோற்றுவிட்ட மாணவர்கள் ஏராளம்—தமிழ் மாணவர்கள் மிகப் பலர் தோல்வியை அணைத்துக்கொண்டனர்—என்ற சோகச் செய்திகளை எடுத்துச் சொல்லுகிறோம் நாம்—அவரோ வேகமாகப் பேசுவதில் நேருவையும் மிஞ்சுகிறார்—பிரிவினை கீதத்தைப் பேத்தல் என்கிறார், எழில் ரோஜாவை எருக்கம்பூ என்கிறார். இன்னிசையை ஒப்பாரி என்கிறார். இலட்சிய முரசத்தை அலட்சியச் சொல்லால் இழிவுபடுத்துகிறார். அவர் அதிகமாகப் பேசமாட்டார்—பேசினால், பாவம்; இப்படித் தான் ஏதாவது பேத்தி விடுகிறார்—அவருக்கு நினைவூட்டுகிறோம்; சயாம் இரட்டைக் குழந்தைகள் ரண சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட செய்தியை! அவை ஒட்டிக்கொண்டு பிறந்த குழந்தைகள் — அவைகளையே பிரிக்கத் துணிந்து விட்டார்கள் இங்கோ—வடக்கும் தெற்கும் ஒட்டப்பட்ட குழந்தைகள்—இவைகளைப் பிரிக்கக் கூடாது என வாதாடுகிறார்கள். சயாம் இரட்டையர் பிரிக்கப்பட்டபின் சாவதாயினும் பிழைப்பதாயினும் கவலையில்லை என்ற முடிவோடு பிரிக்கப்பட்டனர்—இங்கோ நமக்கு நல்ல நம்பிக்கையிருக்கிறது; பிரிக்கப்பட்டால் தான் வாழ்வோமென்று! நாம் பிரிந்து கொள்ளக் கூடாதாம், காமராசர்கள் உரைக்கிறார்கள்!

ஒட்டிப் பிறக்கும் குழந்தைகளை வேடிக்கை காட்டி வயிறு வளர்ப்பார்கள் சிலர்! இங்கும் ஒட்டப்பட்ட இந்த வடக்கு தெற்கு குழந்தைகளை அகில உலகத்திற்கு வேடிக்கை காட்டி—பாரீர் எமது ஐக்ய இந்தியாவை—என்று அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள் அலகாபாத் வீரரும், அவர் தம் சீடரும்!

சயாம் இரட்டையர்களைப் பிரித்திட ரண சிகிச்சை தேவைப்பட்டது! இங்கு ரணசிகிச்சை இல்லாமலே பிரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது! ரணசிகிச்சை அளவுக்கு நிலைமையைக் கொண்டு போக வேண்டாமென்ற அறிவுரையும் திராவிடப் பாசறையிலிருந்து அடிக்கடி கிளம்புகிறது; வடநாடு நோக்கி! அந்த அறிவுரையைத்தான் பேத்தல் என்கிறார் அமைச்சர் பெருந்தகை.

தாலமுத்து நடராசனின் கல்லறையைக் காட்டி, உத்தமன் வேலாயுதத்தின் பிணத்தைக் காட்டி, நெல்லிக்குப்பம் மஜீது, வட சென்னை பாண்டியன் ஆகியோரின் வாடிய மேனிகளைக் காட்டி, ஆறு பிணங்களை ஒரே நாளில் அடுக்கிக் காட்டிய அரசாங்கத்தின் அநீதியைக் காட்டி, தேனியா? மதுரையா? தீக்காடா—*சாக்காடா*? எதுவரினும் ஏற்போம்—எதையும் தாங்கும் இதயம் பெற்றோம்—தாயகத்து விடுதலையை இகழ்ந்தவனை எம் தாய் தடுத்தாலும் விடோம்! விடோம்! என சூளுரைத்துக் கிளம்பிவிட்ட சூரர் பட்டாளத்தின் முரசொலியைத்தான் சூதர் கோட்டத்தில் சிக்கிக் கொண்ட காமராசர் 'பேத்தல்' என ஏசிப்பேசுகிறார். இரட்டையாக ஒட்டப்பட்ட குழந்தைகளைப் பிரிக்கச் சொல்வது பேத்தலாம்! ரணசிகிச்சை அளவுக்குப் போக வேண்டாமென எச்சரிப்பது பேத்தலாம்!

பேத்தல் அல்ல மந்திரியாரே—பேத்தல் அல்ல! பிரிவினை கீதம்! அறிஞன் யாத்த திருக்குறளில் "நாகாத்தல்" என ஒன்றுண்டு — காவாதார், '**சோகாப்பர்**' என்ற அறவுரையும் அதில் உண்டு! புதிய மந்திரியாரே! பழைய பல்லவியை பாடவேண்டாம் அதுவும் பண்டிதர் மெட்டில்—இதுவே, திராவிடத்தின் முதலும் கடைசியுமான எச்சரிக்கை எனக் கொள்வீர்! முடிந்தால்—உமிழ்ந்து விட்ட அந்த முரட்டுச் சொல்லை திரும்பப் பெறவும் முயல்வீர் !

மு. க. எழுதும்
புதிய தொடர் கதை
**புதையல்**
ஜூலை 9 முதல் ஆரம்பமாகிறது.

# — ஏனும் இசைக்கும் கானம் !

"காலனி ஆதிக்கமே! கொடுங் கோலரின் கூடாரமே! நன்மை பல புரிவதாக நாளெல்லாம் ஒலி பரப்பி—தாயகத்து முகில்களை இழுத்துச் சென்று சொந்த நாட்டில் பொழியச் செய்யும் மூர்க்கரின் ஆட்சி முறையே! இதோ கொதித்துக் கிளம்புது பாரீர் எமது விடுதலை பட்டாளம்! வெடித்துச் சீறுது பாரீர் கண்ணீர் வடித்தவர் அணிவகுப்பு!" என்று பாரதிர—ஏகாதிபத்திய இனமெல்லாம் பயந்து நடுங்க ஆசியாவிலே சுதந்தர வேட்கை உடைப்பெடுத்து ஓடுகிறது. ஆசியாவில் மட்டுமல்ல, ஆப்பிரிக்காவில்—மற்றும் எங்கெங்கு அடிமைப் பட்டோர் வதிகிறார்களோ அங்கெல்லாம் விடுதலைப் பண் அடக்குமுறைத் தடைகளை மீறி-காற்றலைகளைக்கீறி சுதந்திரப் படை திரட்டுகிறது.

அந்தப் படை வரிசையின் ஒரு பிரிவுதான் மேற்கு ஆப்பிரிக்காவில் சென்றதிங்கள் வெற்றி வாகை சூடியிருக்கிறது. கோல்டு கோஸ்ட்—வைரம் விளையும் பூமி. தோண்டிய இடமெல்லாம் தங்கமும், மாங்கனீசையும் வாரி வழங்கும் வள்ளல்! இந்த நாள் வரை அந்த சுரங்கக் கனிகளைச் சுரண்டி வாழ்ந்தனர் வெள்ளைக்காரர்கள்; இந்த சரண்டல்காரர்களை சுண்டி எறிந்து விட்டார்கள், கோல்டு கோஸ்ட் மக்கள். புதிய அரசியல் சட்டப்படி அங்கே விரைவிலே பொதுத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. சுயாட்சியும் தருவதாக ஆங்கில அரசாங்கம் வாக்களித்திருக்கிறது. இனிமேல் கோல்ட் கோஸ்ட் சுதந்தர நாடுகளோடு அங்கம் வகிக்கும்; தனக்கென ஒரு நாடு—தனக்கென ஒரு கொடி—என்ற விதத்திலே அந்நாட்டு மக்கள் ஆட்சி முறையை ஏற்படுத்திக் கொள்வர்.

சுதந்தரத்தால் ஏற்பட்ட பூரிப்பு அங்கு மட்டுமல்ல; நமக்கு பக்கத்திலேயே அந்த பூரித்தவர்கள் சிந்தும் சிரிப்பொலி கேட்கிறது.

ஏனும் விடுதலையடைந்து விட்டது!

— இரத்தக்கறை படிந்த ஏடுகளைப் புரட்டாமலேயே சுதந்தர அத்தியாயத்தை படிக்கத்துவங்கி விட்டனர் ஏனத்து மக்கள். மேயரும் உதவி மேயரும் அமைதியாகச்சென்று அரசாங்க அலுவல்களை ஜூனின் 13—அன்று மேற்கொண்டனராம்.

இந்தோ சீனத்திலே கிளம்பிய விடுதலைப் பொறி புதுவையிலே பெருந் தீயாக மாறி ஏனத்திலே ஜ்வாலையிட்டுப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைப் பொசுக்குகிறது.

கீழ்க்கரையிலே ஆந்திர ராஜ்யத்தின் தோளுந்தி – கொடுங்கோலேந்திகளுக்கு இறுதி எச்சரிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது ஏனும் நகரம்.

ஏனும் சுதந்தர கானம் இசைக்கிறது. "வானுயரப் புகழ் கொண்ட தேன் மதுரத்திராவிடமே! நீ எத்தனை நாட்கள் வல்லவர் பிடிக்குள் புகுந்து கொண்டே அடிமை பூமியாய் இருக்கப் போகிறாய்? வடக்கத்திய வரிப்புலிக்கிடையே வாழும் புள்ளி மானாக வாழ்நாளைக் கழிக்கத் தீர்மானித்து விட்டாயா?" – இப்படி பலவாறு ஏனும் இசைக்கும் சுதந்தர கானத்துக்கு சாகித்யம் அமைத்துக் கோள்ளலாம்.

ஏனும் உடைத்து சுக்கு நூறாக்கிய பிரஞ்சு ஏகாதி பத்தியக் கப்பல் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

இப்படி வட நாட்டு ஏகாதிபத்திய கப்பலும் அமுங்குவது எந்நாளோ? ஃ

## அடுத்த இதழில்


●

**கருணாநிதி**யின் தஞ்சை நாஞ்சில் மாவட்ட சுற்றுப்பயணம் பற்றிய கட்டுரை அடுத்த இதழில்.

# மாவீரன் மகளும்—மருமகனும்



★



கொள்கையிலே வலுவற்றவர்களால் கொலை செய்யப்பட்ட ஆசிரியர் உடையார் பாளையம்வேலாயுதம் அவர்களின் திருமகள் மங்கையர்க்கரசிக்கும் திருநிறைச் செல்வன் இராமச்சந்திரனுக்கும் 13—6—54 காலை ஜெயங்கொண்டத்தை அடுத்த காடிக்குளம் கிராமத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

தோழர் பூவராகசாமி எம். பி. அவர்கள் மண விழாவிற்கு தலைமை வகித்தார். விழா முடிவில் தி. மு. கழகத்தின் சார்பில் ரூ. 1000 கொண்ட பண முடிப்பு மண மக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களால் அன்பளிப்பாகத் தரப்பட்டது. அதில் அறிஞர் அண்ணா ரூ. 200, மு. கருணாநிதி ரூ 200, நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ரூ 200, ஈ. வெ. கி. சம்பத், ரூ 100, தி. மு. க. தலைமை நிலையம் ரூ 100, நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், ரூ 50, எஸ். எஸ். பி. லிங்கம் ரூ 50, தந்துள்ளனர்.



# கனவு காண்கிறார் கனம்!

நீர்ச் சுழலில் சிக்கிக் கொண்டு உதவி! உதவி! எனக் கதறும் வாலிபனைப் பார்த்து.......... 'கவலைப்படாதே தம்பி! இப்போதுதான் நான் நீச்சல் பழகிக் கொள்கிறேன்; இன்னும்பதினாறு ஆண்டுகள் பொறுத்துக் கொள்; உன்னை நிச்சயம் காப்பாற்றி விடுகிறேன்''—என்று அலட்சியப் புன்னகை அரும்பளவனாவது பதில் சொன்னால் அவனைப் பைத்தியக்காரன் என்பர்!

நல்லபாம்பு கடித்து விட்டது; நச்சு தலைக்கு ஏறிக் கொண்டே இருக்கிறது—என்று கதறும் குடியானவனைப் பார்த்து 'பொறுத்துக் கொள் தோழா! இன்னும் 16-ஆண்டுகள் தாங்கிக் கொள்; அதற்குள் நான் வைத்தியனாகி விடுவேன்'' என்று பதில் வந்தால் சாகப் போகிறவனிடம் சரசமிடுகிறானே என்று ஆத்திரம் தான் ஏற்படும்; இப்படிக் கிண்டல் செய்பவனை கிழித் தெறிந்து விடலாமா என்றுகூட தோன்றும்!

இதே நிலைமையில்தான் பாரத் வருஷத்தின் பெருங்குடி மக்களையெல்லாம் கேலி பேசியிருக்கிறார் இந்த நாட்டு நிதி அமைச்சர். வளம் கொழிக்கும் நாட்டில் வாழ்ந்தும் வறுமைச் சுழலில் சிக்கித் தவிக்கும் எண்ணற்றோர்-வேலையில்லாத் திண்டாட்ட நச்சரவு தீண்டி நடுத்தெருவில் நிற்கும் நாதியற்றோர்-இவர்களைப் பார்த்து அமைச்சா தேஷ்முக் கர்னூலில் சொல்லி இருக்கிறார், 'இன்னும்பதினாறு ஆண்டுகளில் அதாவது 1970--ல் நம் நாட்டு தேசிய வருமானம் இரட்டிப்பாகி விடும்; அதுவரைகாத்திருங்கள்'' என்று.

நாங்கள் சுதந்தரம் பெற்றால் தெருவெல்லாம் தேனும் பாலும் பெருக்கெடுத்து ஓடும்—என்று பல்லவி படித்து பாரதிர முழக்கிய திருக் கூட்டத்தைச் சேர்ந்த தேஷ்முக்தான் இந்த சுபச் செய்தியை காற்றிலே தவழ விட்டிருக்கிறார்.

வறுமைப் பாலைவனத்தில் வழி தெரியாமல் அலையும்போது—தண்ணீர்! தண்ணீர்! என்று தவிக்கும் போது தேசியத்தார்கள் சிரிக்காமல் சொல்லுகின்றனர்—இன்னும் 16-வருஷம் காத்திருங்கள் அதற்குள் ஒரு குளிர்மலர்ச் சோலையைஉருவாக்கிவிடுகிறேன் அதற்குப் பக்கத்திலேயே ஆழமான கிணறு ஒன்றும் தோண்டுகிறேன்; தண்ணீர் கிடைத்தால் உன் பாகியம்தான் — என்கிற தோரணையிலே!

வெள்ளைக்காரன் எப்போது போவான்; இன்பத்தைப் பெறுவோம்? என்று ஏங்கிய வண்ணம் வறுமையிலே வாடிய குக்கிராமவாசிகள் பலர் வெள்ளைக்காரன் திரும்பி வரமாட்டானா என்று —என்று கதறு கிறார்கள்.

படித்தவர்களுக்கு மட்டுமல்ல இந்த கதி. சின்னஞ்சிறு கிராமங்களிலே வறுமை ஆட்சி நடத்துகிறதா?, காங்கிரஸ் ஆட்சி நடத்துகிறதா என்கிற சந்தேகம் தோன்றுகிற அளவுக்கு நிலைமை சீர்கெட்டிருக்கிறது. சென்றவாரம் பழனியின் வைகாபுரிக்குட்டையிலே இரண்டு பிணங்கள் மிதந்திருக்கின்றன. வாழ்வுக் காட்டிற்குள் வழி அமைக்கப் புகுந்த அந்த வாலிப தம்பதிகள் — ஜோடிப் புறாக்கள் — வறுமை என்னும் வல்லூறுக்கு பயந்து குளத்திலே குதித்து உயிரை விட்டிருக்கின்றன-

அந்த அக்ரமங்களுக்கு அழிவே கிடையாதா என்று ஏங்கி நிற்கிறது நாடு; இன்னும் 16— ஆண்டுகள் பொறுத்திருங்கள்; சுபிட்சம் கொழிக்கும் என்று இதோபதேசம் செய்கிறார் இந்த நாட்டு நிதி அமைச்சர். பதினாறு ஆண்டுகள் — இப்படி எத்தனை பிணங்கள் மிதக்க வேண்டுமோ? எத்தனை நடைப் பிணங்கள் வீதிகளிலே திரிய வேண்டுமோ தெரியவில்லை.

சுபிட்சம் பெருக வேண்டுமா? அப்படியானால் நாலு கோடி ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். சர்வகலாசாலையிலே பட்டம்பெற்று — விற்பன்னன் என்கிற விருதைப் பெற்றவர்கள் பலர் ''வேலையோ! வேலை'' என்று வீதியிலே அலைகிறார்கள்; மூளை பலத்தைக் கொண்டு நாட்டின் மூலபலத்தைப் பெருக்க வேண்டியவர்கள் ''காம்படிப்பதானாலும் பரவாயில்லை; சும்மாயிருக்கும் கரத்திற்கு வேலை கொடுங்கள்'' கடன் தாருங்கள் — என்று கை நீட்டினார்கள் — நாடெங்கும் கடன் தொகை கஜானாவில் குவிந்த வண்ணம் இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முற்றுப் பெற்று இரண்டாவது திட்டத்துக்கு ''துவாஜா ரோகணம்'' செய்திருக்கிறார்கள்—இத் துணைத் திட்டங்கள் இருந்தும்-இவ்வளவு பெரிய தொகையை கடனாக அளித்தும் இன்னும் 16– ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டுமாம், கணிசமான அளவுக்கு பலன் பெற! இந்த ஐந்தாண்டுகளில் நீங்கள் என்னதான் செய்தீர்கள் என்று கேட்டால்—முடிவு பெறாத அணைக் கட்டுகள்—பழுதுபட்ட நிலையிலே இருக்கும் பாலங்கள்—இவைகளைக் காட்டி நம் வாயை அடக்கப் பார்க்கிறார்கள் நம் பாரத புத்திரர்கள்.

நிறை வேறாத திட்டங்கள்—நிறைவேற்றி வைக்க திறனில்லாத அரசாங்கம்—அவசரஉதவி செய்ய முடியாத அரசு கட்டிலேறிகள் இப்படிப் பெருகிக் கொண்டே போகிறது நமது குற்றப் பத்திரிக்கை. ''வறுமைப் பேயே! பதினாறு ஆண்டுகள் உன் பரிபாலனம் நடக்கட்டும்—பட்டினிக் கொடுமையே—உன் கோர நர்த்தனம் துவங்கட்டும்—இன்னும் பதினாறு ஆண்டுகள் உன்னைத் தட்டிக் கேட்க ஆளில்லை—'' என்றவாறு கொடுமைக்கு லைசென்ஸ் வழங்கிவிட்டார் தேஷ்முக்—

ஆற்றுப் படுகையிலே ஒதுங்கி நிற்கும் பிணங்கள்—ஆற்றொணாத் துயரத்தால் மரக் கிளைகளிலே ஊசலாடும் சவங்கள்—மற்றும் ஆடிக் காற்று கிளப்பிவிடும் தூசியைப் போல கூட்டம் கூட்டமாக வீதியிலே வழியும் வேலையற்றோர்-பரட்டைத் தலையினர்—இவர்களின் தொகை குறையப் போவதில்லை; இந்த நாடு குபேர புரியாக ஆகப் போவதில்லை.

16 ஆண்டுகள் பொறுத்திருக்கவாம்—நாடு சுபிட்சம் அடையுமாம்-நாட்டோர் சுகம் பெறுவராம்!-ஒரு அமைச்சர், அதுவும் நிதி அமைச்சர்-பேசுகிற பேச்சா இது?

''காங்கிரஸ் கலகலத்து விட்டது; காரியக் கமிட்டித் தீர்மானத்தைக்கூட காங்கிரசின் முக்கியஸ்தர்கள் எதிர்க்கிறார்கள்; எனவே காங்கிரஸ் 10 ஆண்டுகள் கூட நிலைக்கப் போவதில்லை—அதன்பின் யார் ஆண்டாலென்ன என்று எண்ணித்தான் சிந்தாமணியார் 16 ஆண்டுகள் சொன்னாரோ என்னமோ; நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

''நாடு நலம் பெற வேண்டும்; நல்லாட்சி மூலம்தான் புரட்சியை அடக்க முடியும்; விதண்டாவாதமும் வீம்புப் பேச்சும் விபரீதத்தை விளைவிக்கும்'' என்று எண்ணுகிறவர்களாக இருந்தால் ஆளும் பொறுப்பை விட்டுவிட்டு விலகி நிற்பது தானே முறை! அதைவிட்டு எந்த அரசும் சொல்லாத—சொல்லவே கூசும் படியாகவா காலத்தை ஓத்தி போடுவது? அப்பப்பா, கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடுமை காங்கிரஸ் ஆட்சி!

## டடா! டடா!!

நாகர்கோயிலில் நொந்து போனவர் கழகமகாநாடு ஒன்று நடைபெற்றதாம். பல் ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தார்களாம். பல் ஆயிரம் என்றால் **32** ஆல் வகுத்துப் பார்த்து **31** 1|4 மக்கள் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள். அந்த மகாநாட்டில் நீர்ப்பாம்புகள் எல்லாம் சீறி விழுந்ததாம். நமது திருத்தணிபிள்ளையாரும் அங்கு போயிருந்ததாம். அந்த எம். எல். ஏ. பிள்ளையார் இங்கெல்லாம் ஏதாவது தாறுமாறாகப் பேசினால் துதிக்கை அறுபட்டு விடுமென்று பயந்து — கன்யாகுமரி கடைசிக்குச் சென்று — ஏற்கனவே ஒரு பல் போய்விட்ட அந்த ஏகதந்தமூர்த்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினரை — டா — போட்டு அழைக்க ஆரம்பித்து விட்டதாம். திராவிடம் என்றால் என்னடா! உனக்கு அது கிடைக்காதடா! எங்கேயடா இருக்கிறது, திராவிடநாடு? என்றெல்லாம் ''டடடா!'' பாஷையிலே சந்துமுனை சிந்து பாடியிருக்கிறது அது! அங்கும் அதன் துதிக்கையை நறுக்க தோழர்கள் துடியாய்த் துடித்தனராம். நல்லவேளை – நாகர் கோயிலில் கழகப் பணியாற்றும் நமது காளைகள் பொறுமை யிழக்காமல் அந்தப் பிள்ளையாரை திரும்ப அனுப்பி யிருக்கிறார்கள் —இது செய்தி; திராவிடம் அறியவும்!


தஞ்சையில்! ஜூலையில்!

எதிர்பாருங்கள்

ராஜேந்திரன் நாடக மன்றத்தார்

நடிக்கும்

அம்மையப்பன்

[ மு. கருணாநிதி எழுதியது ]

# ஆதரிக்கிறோமாம் . . .

[ 1–ம் பக்கம் தொடர்ச்சி ]

டாரா? அப்படி அவர் கூறும் போது, அம்மையார் அவரைப் பார்த்து குழந்தையின் பெயரை மாற்றி விட்டால் அதற்கு பசி அடங்கி விடுமா? பெயர் மாற்றுவதால் அதற்குப் பால் கிடைத்து விடுமா? என்று கேட்டால் அதற்கு ஜீவா என்ன பதில் சொல்வாரோ — அதைத்தான் இப்போது நாம், அவருக்கும் அவரது தோழர்களுக்கும் பதிலாகத்தர ஆசைப்படுகிறோம் — ஒரு இயக்கத்திற்கு எத்தனையோ திட்டங்களிருக்கலாம். எல்லா திட்டமுமே 'பசி' ஒன்றை மட்டும் அடிப்படையாக வைத்து தீட்டப் பட்டவைகளாயிருக்க முடியாது. இதை உணர்ந்தும் அவர்கள் பிழைபுரிகிறார்கள் — இல்லாவிட்டால் தி. மு. கழகத்தின் நடவடிக்கைகள் அனைத்தையுமே தவறான முறையில் விமர்சனம் செய்திடக் கிளம்ப மாட்டார்கள். புதிய கல்வித் திட்டத்தை நாமும் எதிர்த்தோம்–அவர்களும் எதிர்த்தார்கள். நாம் களம் புகுந்தோம் — அவர்கள் தீர்மானத்தோடு நின்றார்கள் — இன்னும் சொல்லப் போனால், கல்வித் திட்டம், தோழர் ராமமூர்த்தி அவர்களின் ஒரு ஓட்டினால் உயிர் பெற்று உலவக் கிளம்பி, பல உயிர்களைக் குடித்தது. அத்தகைய தீய திட்டத்தை திரும்பப் பெற்றார் காமராசர் என்கிற போது அவரைப் பாராட்ட மாட்டோமா? நமக்கல்லவா தெரியும் இந்த வெற்றிக்கு கழகம் தந்திருக்கிற விலை எவ்வளவுஎன்று! நாமல்லவா கண்ணீர்ப் புகையின்கடுந்தாண்டவத்தை தாங்கியவர்கள். தோட்டாக்கள் துளைத்தது நமது தோழர்களின் அங்கங்களையல்லவா? ஆகவே நாம் வெற்றிச் சிந்து பாடுகிறோம். இதுவும் பொறுக்கவில்லை,' கம்யூனிஸ்டு கட்சி—அது சொல்லுகிறது— இப்போது மகிழ்வது அர்த்தமற்றது—இந்தக் கல்வித் திட்டத்தின் சில அம்சங்கள் மீண்டும் புகுத்தப்படலாம்—ஆகவே மகிழாதீர் — என்று! குழந்தை பிறந்த சேதி கேட்டு பூரிப்படையும் தந்தையிடம் ஒரு குணக்கேடன் கூறினானும்; குதிக்காதே அப்பனே! குழந்தைக்கு அடுத்த வருஷம் ஒரு நோய் வரப் போகிறது — அதை எண்ணி இப்போது கவலைப்படு என்பதாக! நோய் வந்தால் தக்க வைத்தியம் செய்து நீக்கிவிடலாம் என்ற நம்பிக்கையுள்ள தந்தை–குணக்கேடனின் குள்ள புத்தியைப் பார்த்து "ஏடா மூடா! எதையோ நினைத்து இப்போது அழச் சொல்கிறாயா என்னை" என்று தானே ஆத்திரத்தோடு கேட்பான்—மாலங்கோவ், என்றோ ஒரு நாள் ஸ்டாலினைப் போல மரணத்தை அணைத்துக் கொள்வார் என்பதற்காக — ரஷ்ய பூமியின் தலைவராக அவர் வந்த போது மகிழ்ச்சி அடையாமலா இருந்தார்கள் இந்த கம்யூனிஸ்டு மகிபர்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் எதைச் சொன்னாலும் எதிர்க்கவேண்டும் என்ற போக்கிலே முடுக்கிவிடப் பட்டிருக்கும் அவர்கள் இப்படித் தான் முரணாகப் பேசிக்கொண்டிருப்பார்கள் என்று நமக்குத் தெரிந்தாலும் — பொது மக்கள் உண்மை உணரவேண்டு மென்பதற்காகவே, இன்னும் சில கூற விரும்புகிறோம்.

புதிய கல்வித் திட்டத்தை திரும்பப் பெற்ற காமராசரை— தி. மு. கழகம், பாராட்டுகிறது உண்மைதான்! ஆனால் பாராட்டுவதற்கும் ஆதரிப்பதற்கும் உள்ள பெரும் வித்தியாசத்தைக் கம்யூனிஸ்டுகளால் உணர முடியவில்லையா என்ற சந்தேகம் நமக்குப் பலமாகிறது. ஆச்சாரியார்—மந்திரி சுப்பிரமணியம் இருவரும் பெற்ற பிள்ளை புதிய கல்வித் திட்டம். ஆம், சிறுத்தொண்டனுக்கும் அவன் மனைவிக்கும் உதித்த சீராளனைப் போன்றது இந்தத் திட்டம். பெயர்தான் சீராளன்—ஆனால் திட்டமோ சீறிவரும் புயல்! மான்குட்டிகளினிடையே ஊன் தின்ன உறுமும் புலி! அந்த சீராளன் திட்டத்தை சீரழிக்க விரும்பினர் காமராசராம் இந்தச் சிவனார். ஆச்சாரியார் தந்த செல்வத்தைப் பாரீர்—அதன் அழகு பாரீர்—என்று ஊருக்கு ஊர் அந்த திட்டத்திற்குத் தாலாட்டு பாடி — ஆராரோ பாடுவோம் வாரீர்! ஆச்சாரியார் திருமகனே! ஆராரோ! என்று ஆனந்தகீதம் பாடுவோம் 'வாரீர்–என்று அனைவரையும் அழைத்தார் திட்டத்தின் தாயாம் மந்திரி சுப்பிரமணியம்—ஐம்பது ஆண்டுகாலம் ஆச்சாரியார் உதிரத்திலும்,சுமார் பத்து மாதகாலம் சுப்பிரமணியம் உதிரத்திலும் ஊறிய அந்த சீராளக் குழந்தையை தனக்கு கறி சமைத்து வைக்கும்படி தாய்க்குக் கட்டளையிட்டார் காமராசப் பரமசிவன். தாயும், தான் பெற்ற திருமகனை கழுத்தை முறித்து கறிசமைத்து காமராசச் சிவனுக்கு படையல் செய்து விட்டார். புராணத்து சீராளன் உயிர் பெற்றது போல இந்தப் புதுக்கல்வித் திட்ட சீராளனும் உயிர் பெறுவானோ என்ற ஐயம், கம்யூனிஸ்டு நண்பர்கட்கு! நாம் முன்பே சொன்னோம், இந்தச் சீராளன் உயிர்பெற மாட்டான்; காரணம் — காமராசர் உண்மையான சிவனல்ல என்ற உண்மையையும் — புராணத்து சிவன் புளுகின் விளைவு என்ற விஷயத்தையும்!

சீராளன் சித்ரவதைப் படலம் முடிந்ததும் — காமராசரை கழகம் பாராட்டியது. நன்றி தெரிவித்தது. ஆனால் கம்யூனிஸ்டுகள் ஆமாம், ஒரு காலத்தில் "நேருவின் கை இளைத்துப் போயிருக்கிறது — வாருங்கள் பலப்படுத்துவோம்" என்று கூறியவர்கள் — நம்மைப் பார்த்து, நாம் காமராசர் ஆட்சியையே ஆதரிக்கிறோம் என்று பொய் புகல, கூட்டோடு கிளம்பி யிருக்கிறார்கள். அடிக்கடி நடைபெறும் அவர் தம் ரகசியக் கூட்டங்களிலே இது போன்ற புதுவித "ஸ்டண்டு" பிரச்சார முறைகள்தான் தயாராகின்றன போலும்!

சீராளனை வதைத்த காமராசப் பரமசிவனை பாராட்டுகிறோம்— ஆனால் வணங்கிடமாட்டோம்— வணங்கிட கை எழாது! பக்தர்கள் பரமசிவனாரை வணங்கிடும் போது, அவன் தோளில் கிடக்கும் பாம்பையும், தலையில் இருக்கும் கங்கா தேவியையும்சேர்த்து வணங்குவது போலவே, நாமும் இந்த காமராசச் சிவனை வணங்க நினைத்தால்—அவருடைய மந்திரி சபை யெனும்தோளில் கிடக்கும் துரோகப்பாம்புகளையும்சேர்த்து வணங்க வேண்டும்; [8ம் பக்க

# அவரே அண்ணா !

[ நாஞ்சில் கி. மனோகரன் ]

வடிவுற்ற திரு நாட்டை வன்காடாக்கி
  வன்காட்டைச் சிறுநரிகள் வளர்காடாக்கி
முடிகொண்ட மூவேந்தர் வழியாய் வந்த
  மறக்குலத்தை, உயர்நெறியின் இருப்பிடத்தை
அடிபெயர்ந்த மரமாக்கி, ஆற்றல் தீய்ந்து
  அடிமை யெனும் அவமானச் சின்னமாக்கி
அடிவைத்தார்; ஆரியர்காண்; அவரே ஆண்டார்—
  அடக்கடா என்றுரைத்தார் அவரே அண்ணா!

**2**

வாளெடுத்த மாவீரன்! வெற்றித் தோளால்
  வாகைப்பூ விரிமார்பில் தவழவிட்டான்
தாள் பணிந்த மாகோரம்! தண்டனிட்டான்!
  தறுதலைகள் கட்டளைக்குச் சரண்புகுந்தான்!
ஊழ்வினையும், தலைவிதியும், உலுத்தர் வாழ்வும்
  உலுக்கிற்று! உற்றதுணை கடவுள் வந்தார்!
ஆள் வினைதான் போயிற்றா? அறிவுச்சோதி
  அணைந்ததுவோ? எனக் கேட்டார் அவரே
    அண்ணா

**3**

ஒளி சிந்தும் கண்களிலே கட்டோ? ஐயோ
  எழில் கொஞ்சும் திருநாட்டில் இருளா? என்றும்
தெளிவுற்ற உள்ளத்தில் மருளோ? இன்பத்
  தெளிநீரில் பெரு நஞ்சோ? அறிவுச் சோலை
அழிந்ததுவோ பண்ணெழுப்பும் புள்ளினங்கள்?
  அலறிற்றே! கருகிற்றே கலைப்பூங்காடு
ஒழிந்ததுவோ எம்நாடு! எடடாவாளை
  ஒழித்திடடா! பகைப் புலத்தை என்றார் அண்ணா

**4**

வட நாட்டின் கூர்வாள் என் தாயின் மார்பில்!
  வட நாட்டார் ஆதிக்கம் தென்னாட்டுள்ளே!
படை வீடு தென்னாடு; கலையின் கோயில்
  செல்வத்தின் பெரு வீடு! சுரண்டல் நாடா?
அடைபட்ட சிங்கங்காள்! அவமானத்தை
  அறுத்தெறிவீர் "அடி முட்டாள்" பட்டம் ஏனோ!
புடைத்தெழு முன்தோள் தட்டாய்! பறப்பாய் சிட்டாய்!
  புலிகாண் நீ, எலியல்ல!—புகன்றார் அண்ணா!

**5**

கலைத்துறையில், கல்வியிலே, மொழியில், வாழ்வில்
  பொருட்டுறையில், பெருவாழ்வில், நீதிமன்ற
நிலைக்கட்டில், தொழில் முறையில், வணிகவாழ்வில்
  நின்றாடும் நிலைவாழ்வில், எங்கேயும் நாம்
நிலை குலைந்த சாதிகளா! நீணிலத்தில்
  நாதியற்ற நலிவினமா? நாமா? இல்லை!
வலைவீசிச் சூழலிலே வீழ்த்தி விட்ட
  வஞ்சகரை வேரறுப்போம் என்றார் அண்ணா

**6**

அண்ணாவின் தலைமையிலே . அவராட்டும் சுட்டுவிரல்
  அசைவினிலே அணிதிரள ஆயிரமாம் பெருமக்கள்
கண்ணன்றோ எம் அண்ணா! கட்டளைதான் தேவை
    யென
  களங்காணப் போர்க்கோலம் பூண்டிட்ட
    காளையர்கள்
விண்ணதிர, நிலமதிர, விரிகடல்கள் பொங்கிடவே
  விரைந்திட்ட தொழிலாளர், மாணவர்கள்
    வனிதையர்கள்
பண் முழக்கி நிற்கின்றார் திருநாட்டை நமதாக்க!
  பால் நிலவு பொங்குதடா! ஒளிக்கற்றை
    உலகெல்லாம்

# சொர்க்கவாசல்
## கலைத்தோட்டம்

கனல் தெறிக்கும்; அது கயவரைத்தான் தாக்கும்!

அனல் கக்கும்; அது அற்பரைத்தான் பொசுக்கும்!!

இப்படி ஒரு விளம்பரம் நமது "சொர்க்க வாசல்" படத்தைக் குறித்து சில ஏடுகளிலே வெளியாகியிருந்தது. அது போலவே கயவர் தாக்கப் படுகின்றனர். அற்பர் அழிக்கப்படுகின்றனர். ஆண்டுகள் மூன்றுக்கு மேல் தமிழகம் ஏங்கித் தவித்து ஆவலுடன் எதிர்பார்த்து நின்ற 'சொர்க்கவாசல்' இன்று தமிழகத்துப் பெரு மக்களிடையே வெற்றிப் புன்னகையோடு பவனி வருகிறது.

ஒரு கவிஞன்—அதுவும் உண்மைக் கவிஞன்—போர்க் குணப் படைத்த புரட்சிக் கவிஞன்—'சிறையே வரினும் தடையை மீறுவேன்—சிரமே போயினும் தடையை மீறுவேன்' என சூளுரைக்கும் சுயமரியாதைக்கவிஞன் அந்தக் கவிஞன்-புவியாளும் மன்னனுக்கே புத்தி கற்பிக்கிறான். மன்னன் மூலம் அந்த மாநிலத்தையே திருத்துகிறான். அத்தகைய எழுச்சிப் பாடகன் ஒருவனின் வாழ்வைச் சித்தரிக்கும் எழிலோவியமே "சொர்க்க வாசல்".

அறிஞர் அண்ணா தரும் புதையல் "சொர்க்கவாசல்". அண்ணா அறிவுக் கடல்—அதிலிருந்து முகில்கள்—முகில் பொழியும் மழை—மழை படைக்கும் அருவி—அருவி தரும் ஆறுகள்—ஆற்றிலே வாய்க்கால்கள்—இப்படி ஒரு புதிய எழுத்தாளர் சமுதாயத்தை உண்டாக்கி மகிழும் தோற்றுவாய் அவர். ஆகவே அந்த முத்துக் கடலைப் பாராட்டவோ-வர்ணிக்கவோ-நாமெல்லாம் தகுதியற்றவர்கள். அவருக்கு நன்றி கூறிக்கொண்டு—நாமெல்லாம் அவர் அணி வகுப்பில்—என்று பெருமைப் பட்டுக் கொண்டு நடை போட வேண்டியவர்களே தவிர, அவரது எழுத்துக்களை விமர்சனம் செய்திடும் திறமையுள்ளவர்களல்ல! நாமென்ன; யார்தான் அந்த எழுத்துலக பூபதியின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டுமென்று ஆசைப்படாதவர்கள்! அத்தகைய நமது அண்ணாவின் காவியமாம் "சொர்க்கவாசல்" அனைவரது இதயத்தையும் இன்பத்தால் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறது.

புயலும் தென்றலும் மாறி மாறி வீசும் தீந்தமிழ் வசனத் தொகுப்பு சொர்க்க வாசல்! படபடவென வெடித்துக் கிளம்பி பகைவர் நடுங்க இடிக்கும் இடியெனப் பல இடங்களிலே வசனங்கள்!

"சவுக்கால் அடிப்பீர்களா? அதுஉடலைத்தான் புண்ணாக்கும்—உலுத்தனே! மனதையே புண்ணாக்கிவிட்ட மாமிசப்பிண்டமே! தடை போட்டாயே தடை, பாடலுக்கு—முடிதாங்கியே, பார்த்தாயா உன் தடை தவிடு பொடியானதை! வெட்கம் வேண்டாமா உனக்கு! நீயும் ஒரு அரசனா? நாட்டை ஆளுகிறானாம் நாட்டை! காட்டிலேயிருந்து என் அண்ணா கட்டளையிடுகிறார்—உன் தடை உடைபடுகிறது!" என்று திலகா பேசும்போது திராவிடத்து அரசியல் நிலையை நினைத்து — தடை விதிக்கப் பட்ட நம்முடைய கருத்துக்களை நினைத்து — நம்மை நாமே மறந்து முழக்கமிடுகிறோம்; அத்தகைய உணர்ச்சிப் பெருக்கு உந்தித் தள்ளுகிறது நம்மை!



அதுபோலவே அரசனது ஆணையைத் துச்சமெனக் கருதி நாடெங்கும், நல்லவர் வீடெங்கும் "ஆகும் நெறியேது" பாடல் ஒலித்திடும் போது — எங்கோ புரட்சி நடக்கும் ஒரு இடத்திலேயே நாமும் ஐக்யமாகி விட்டதாகத் தோன்றுகிறது. இங்கே அண்ணாவின் கதைச் சம்பவம் மட்டுமல்ல; டைரக்டர் காசிலிங்கம் அவர்களின் கைத்திறனும் இணைந்து உடலைச் சிலிர்க்க வைத்திடுகிறது. திரு காசிலிங்கம் அவர்கள் சொர்க்க வாசலின் சிறப்புக்காக பட்ட கஷ்டங்களை நேரிலேயே கண்டிருக்கிறேன். உழைப்புக்குத் தக்க வெற்றியை அவர் பெற்றுவிட்டார். காதல் கட்டங்களிலும் — திலகாவின் கற்பு சூறையாடப்படும் காட்சிகளிலும்—சீரிழந்த திலகா—ஆம்; அந்த செந்தாமரை—சேற்றிலே நடந்துவரும் கருத்துமிழ் இடங்களிலும் காசிலிங்கம் அவர்களின் திறமை கம்பீரமாகக் கொடி போட்டு நிற்கிறது, துரையின் "கேமரா" துணைகொண்டு. படத்திலே வரும் பாடல்கள் அத்தனையும் தங்கம். "எடைக்கு எடை தங்கமடா" என்கிறானே, முத்து மாணிக்கத்தின் தந்தை — அது போலத்தர வேண்டும்—உடுமலை நாராயணக் கவிராயருக்கு எடைக்கு எடை தங்கமாக — என்றுதான் தோன்றுகிறது நமக்கு!

"கன்னித் தமிழ்ச் சாலையோரம்"—ஆகா, என்ன தித்திப்பான வரிகள்—"சீறி வந்த புலியதனை முறத்தினாலே—அடித்து, சிங்கார மறத்தி ஒருத்தி துரத்தினாளே—" அடடா—எத்தனை வீர மூட்டும் சொற்கள்—எத்தனை தெம்பான கருத்துக்கள்.

காலஞ் சென்ற சுப்பராமன் அவர்களும்—அவர் தம் மாணவர் விஸ்வநாதம் ராமமூர்த்தி ஆகியோரும் இசை அமைத்த அந்த இன்பத் தென்றலாம்—இசையமுதமாம்—சொர்க்க வாசலின் பாடல்களை நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் பாடும்போது தமிழ்கொஞ்சுகிறது. கவிஞன் மதிவாணன் பாத்திரத்தை ஏற்று, அண்ணாவின் அர்த்தம் நிறைந்த அலங்காரத் தமிழை உச்சரிக்கும் போதும், கட்டாரி கையிலேந்தி காவலனைசாய்த்திடப்புயல்போல வந்திடும் போதும்-நடிப்புப் புலவர் நாட்டு மக்கள் அனைவரின் பாராட்டுதலையும் பெறுகிறார். சொர்க்கவாசல், ராமசாமி அவர்களின் நடிப்பால் சோபித வாசலாகிறது. இன்னும்—மன்னனுக்கு அர்ச்சனை செய்யும் பி. எஸ், வீரப்பா, முத்துமாணிக்கமாக வரும் புதுமை நடிகர் ராசேந்திரன், மந்திரியாகவரும் நடிகமணி நாராயணசாமி, மதகுருக்களாகவரும், பாலசுப்ரமணியம், நாராயண பிள்ளை, ஹாஸ்ய விருந்தளிக்கும் எமன் கிருஷ்ணன், ராணியாக வரும் திருமதி பத்மினி, திலகாவாக வரும் திருமதி அஞ்சலி, அனைவருமே தங்களின் நடிப்பு மூலம் சொர்க்கவாசலின் புகழை உயர்த்துகிறார்கள். இப்படி ஒரு சிறந்ததமிழ்க் களஞ்சியத்தை நாட்டுக்கு அளித்த மனோகரா சோமசுந்தரம் அவர்களும், பரிமளம் காளியப்பா அவர்களும் நன்றிக்குரியவர்கள்; அண்ணாவின் காவியப் படத்தைக் கண்ட நாமோ பெருமைக் குரியவர்கள்!

●


## வட ஆற்காடு மாவட்ட
## தி. மு. கழக மாநாடுகள்

○

### ஜூன் 26, 27,ம் தேதிகளில்
### வேலூரில் நடைபெறும்

| | |
|---|---|
| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
| தலைவர் | தலைவர் |
| குழந்தடிகள் | கே. ஏ. மதியழகன் |
| திறப்பாளர் | திறப்பாளர் |
| இரா. நெடுஞ்செழியன் | நாஞ்சில் மனோகரன் |

ஓவியக் கண் காட்சித் திறப்பாளர்
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

வரவேற்புக்குழுத் தலைவர்கள் :—மா. பா. சாரதி எம்.சி,, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி,
செயலாளர் :—வி. ஆர். ஆதிமூலம், போளூர் சுப்ரமணியம்
பொருளாளர் :— வி. எஸ். ரங்கநாதன்

●

இரு நாட்களிலும் புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் 'அம்மையப்பன்' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

# கடைசிப்பக்கம்

கண்ணப்பன்—சென்னை.

(?) காமராசர் பதவி ஏற்றபின் ராமமூர்த்தி சட்டசபைக்கே வருவதில்லையே ஏன்?

சித்தூர் சுப்பிரமணியம், தண்டபாணி தேசிகர், சிதம்பரம் ஜெயராம்இவர்கள் எல்லாம் நடத்துகிற இசை விழாக்களைப் பாருங்கள்—பிராமண ரசிகர்கள் பெரும்பாலும் வரமாட்டார்கள். ஒரு அக்கிரகாரத்துப் பிச்சுமணி அபசுரத்தில் பாடுவதாகவேயிருக்கட்டும்; அப்போது பாருங்கள்; எத்தனை அய்யர்வாள்களின் தலைகள் அந்த சபையில் ஆடுகின்றன என்று!

(?) கம்யூனிஸ்டுக் கட்சிக்கு கட்டுப்பாடுதான் பலம்; தி. மு. கழகத்திற்கு உரிமைதான் பலம் என்று அறிஞர் அண்ணா ஆழ்வார் பேட்டை பொதுக் கூட்டத்தில் சொன்னாரே; அதன் விளக்கம் என்ன?

தி. மு. க. ஒரு இலட்சியப் பூந்தோட்டம். கொள்கைத்தேன் பருக நினைக்கும் வண்டுகள் அங்கேவரலாம்; மீண்டும் திரும்பிவிடலாம்; அந்த உரிமை அளிக்கப்பட்டிருந்தும் வண்டுகள் திரும்புவதில்லை; கொள்கைமணத்தில் லயித்துவிடுகின்றன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சிப் பூங்காவில் உள்ளே நுழைவதற்கே கட்டுக் காவல் பலவற்றைத் தாண்ட வேண்டும்; அவைகளையெல்லாம் கடந்து உள்ளே சென்றபோதிலும்அங்கேஉள்ளக் கிடக்கையை வெளியிட முடியாத ஜீவானந்தங்கள் பலருண்டு!

வேலு—நாமக்கல்.

(?) கிருஷ்ணன், ராமர் முதலிய கடவுள்களுக்கும் காளியம்மன் முனியப்பன் முதலிய கடவுள்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னவை பார்ப்பனரின் வயிற்றுப் பிழைப்புக்கும், பின்னவை பார்ப்பனரல்லாத சிலரின் வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்பட்டவை. மொத்தத்தில் இருதரப்பு கடவுள்களும் பார்ப்பனரல்லாதாரைச் சுரண்டும் சாதனங்கள் தான்.

ஆனந்தன்—மாயவரம்.

(?) வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தல்களில் உங்கள் கட்சி கலந்து கொள்ளுமா?

இது பொதுக்குழுவில் அல் [illegible] முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம். கட்சி ரீதியாக ஜில்லா போர்டு தேர்தலில் கலந்து கொள்ளாது என்றே நிச்சயமாகத் தெரிகிறது.

(?) தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள பெரியார் அனுமதி தந்துவிட்டாரா?

கொஞ்சம்பொறும் தோழரே! இப்போது தானே பெரியார் அவர்கள் ஜில்லா போர்டு தேர்தலில் தனது கழகத்தினர் கலந்து கொள்ள அனுமதி தருவது பற்றி யோசித்து வருகிறார். அதற்கு அவர் அனுமதி கொடுத்துவிட்டால் இதற்கும் அநேகமாக அனுமதி கொடுத்தது போலத்தான்.

சித்தூரான்—திருத்தணி

(?) திருப்பதி வெங்கடாசலபதிக்கு இரண்டரை லட்ச ரூபாய் செலவில் வைரக்கை செய்திருக்கிறார்களாமே; அந்தக் கையின் தோற்றம் எப்படியிருக்கும்?

எப்படியிருக்குமா? சென்னைத் தெரு வோரங்களில் குடியிருக்கும் ஏழைக் குழந்தைகளின் கையில் சிரங்குகள் தோன்றி சீழ்க் கொப்புளங்கள் கிளம்பியிருக்குமே, அது போலிருக்கும் அந்த வைரக் கை!

வி. எஸ். கோபால்—பெங்களூர் சிட்டி.

(?) திராவிடர் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வித்தியாசமேன்ன?

ரிவால்வாருக்கும், பிஸ்டலுக்குமுள்ள வித்தியாசம்தான்.

(?) திராவிட நாடு கிடைக்க சுலபமான வழி என்ன?

திராவிடநாடு திராவிடருக்கே?
—ஆலைகள் முதலாளிகளுக்கே!
திராவிடநாடு திராவிடருக்கே—
நிலங்கள் பண்ணைகளுக்கே!
திராவிட நாடு திராவிடருக்கே
— திருத்தணி ஆந்திரருக்கே —
நாஞ்சில் மலையாளிகளுக்கே!

இதுபோல முழக்கமிட்டால் திராவிட நாடு விரைவில் கிடைத்து விடும். ஆனால் நிரந்தர சுதந்திரத்தோடு வாழ வேண்டிய திராவிட பூமியை நாங்கள் கோருவதால் எல்லா இடையூறுகளையும் எதிர்த்து எதிர் நீச்சல் போடுகிறோம் — தாமதமானாலும் கனி தேவையே தவிர — காய் கவர மாட்டோம்.

## ஆதரிக்கிறோமாம் ...

(6-ம் பக்க தொடர்ச்சி)

அவர் தலையில் இருக்கும் வடநாட்டு ஏகாதிபத்யம் என்ற கங்காதேவியையும் சேர்த்துத் தொழுதிட வேண்டும்—ஆகவே தான் காமராசர் அந்தப் பாம்புகளை வீசி எறிந்துவிட்டு—தலையிலுள்ள அழுத்தும் சக்தியாம் ஆதிபத்ய வடவர் ஆட்சியையும் அகற்றிவிட்டால் நாங்கள் அவரை ஆதரிப்போம் — ஆனந்தமாகக் கூடி நின்று ஆதரிப்போம்!

இதை உணர முடியாத தோழர்கள் தங்களின் செல்வாக்கு பறி போய் விடுமோ என்ற பீதியின் காரணமாக கழகத்தைப் பற்றிய பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நமக்குத் தெரியும்; ஆச்சாரியார் அரளிப்பூ—அழகானது—ஆனால் ஆபத்தானது என்று! அது போலவே காமராசர் கனகாம்பரம் — அழகில்லாவிட்டாலும் ஆபத்தில்லாதவர்!—ஆனால் மணமில்லாதவர்! எந்த மணம்? திராவிட நாடு பிரிய வேண்டுமென்ற விடுதலை மணம்! அந்தப் புதிய மணம் பெற்று பொலிவுள்ள ரோஜாவாக-முல்லையாக-அவர் மாறினால் தி. மு. கழகம் நிச்சயம் அவரை ஆதரிக்கும்—அல்லாது, அவரும் அரளியாக மாறினால்—ஆச்சாரியாரைப் போலசோகச்சரளிபாடிகொண்டு சாந்தி அடைய வேண்டியது தான். அதுவரை தி. மு. கழகத்தைப் பற்றிய புரளியில் இறங்காமலிருக்க கம்யூனிஸ்டு நண்பர்களை வினயத்தோடு கேட்டுக் கொள்கிறோம்.

## துரை மகனார் போடும் தூபம்!

திருப்பதி, ஜூன் 11— இன்று இங்கு வெங்கடேஸ்வரர் மூல விக்ரகத்திற்கு வைகுண்ட ஹஸ்தம் அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. இந்த ஹஸ்தம் நிர்வாக அதிகாரி சி. அண்ணாராவ் முயற்சியால் விலையுயர்ந்த கற்களால் ரூ 2,45,600 செலவில் செய்யப்பட்டிருக்கிறது.

230 காரட் வைரங்கள், 40 காரட் கோமேதகம், மற்றும் கற்களால் செய்யப்பட்டுள்ளது தங்கத்தின் எடை மட்டும் 490 தோலா, இதைச் செய்வதற்கு கூலியே ரூ 6500.

இப்படி ஒரு செய்தி சென்ற வார தின இதழ் ஒன்றில் பிரசுரமாகி யிருந்தது. அதே செய்தித் தாளில் வேறொரு பக்கத்தில்,

'பணவுதவி எந்த நோக்கத்திற்காக உதவப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறும்'

'இந்தியாவிலுள்ள பொதுவுடமையரோடு போராட வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே உண்டு'

இப்படி தன் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டு துரை மகனார் ஒருவர் இந்தியாவுக்கு பணஉதவி செய்ய முன்வந்த செய்தியும் பிரசுரமாகியிருக்கிறது; ஆமாம், அமெரிக்க நாட்டு ஆலன் துரை இந்தியாவில் பொதுவுடமையை அழிக்க இந்தியாவுக்கே பட்டம் கட்டி விடுகிறார் தனம் தருவதின் வாயிலாக! வைகுந்த அஸ்தம் — வெங்கடேஸ் வாருக்கு! வெளிநாட்டுப் பணம் — பொதுவுடமையை அழிக்க!

ஆலன்துரைமகனார் இந்தியாவுக்கு துணை நின்று பேசுகிறார் — அது அரசியல் நளினமோ, ஆரணங்கு சாகசமோ நமக்குத் தெரியாது— ஆனால் வைகுந்த அஸ்தங்கள் தோன்றுகின்ற வரையில் ஆலனின் ஆசை — அமெரிக்காவின் விருப்பம் நிறைவேறாது; ஆம், பொதுவுடமை அழியாது — மாறாக பூக்கும் — காய்க்கும்—கனியாகும் —இது உறுதி.

வறுமை — பொதுவுடமையின் தாய், பசிஅதன் தந்தை, வேலையில்லா திண்டாட்டம் அதற்கு ஆசான், இவைகள் ஒழிக்கப்படும் வரை பொதுவுடமை அழியாது — ஆனால் இவை மூன்றையும் ஒழிக்க வைகுந்த அஸ்தங்கள் ஒழிய வேண்டும். வியர்வையும் விழிநீரும் வைகுந்த அஸ்தங்களாகி சமுதாயத்தில் மேடு—பள்ளம், உயர்வு—தாழ்வு, கோபுரம்-குப்பைமேடு, என்ற நிலைஉருவாகும்போது,பொதுவுடமை ஒழிவது எவ்வாறு, அதை ஒழிக்க போரிடுவது எங்ஙனம்? பிரதமரோ கும்பமேளா ரசிகர், குடியரசுத்தலைவரோ பார்ப்பனரின் பாதம் கழுவி பாதகாணிக்கை வைக்கும் 'பக்திப் பரவசர்', நாட்டின்நிர்வாகம்இவர்கள்கையில்! —வைகுந்த அஸ்தம் வையகத்து மாந்தர்தம் பசியை எப்படிப் போக்கும்?

துரைமகனார் போடும்தூபம் இந்தியாவைப் பொறுத்த வரையில் தோல்வி தான்!

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.